**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

**No.5. KavignarPuduvaiSivam St**
**Venkata Nagar Extension**
**Pondicherry 605 011 INDIA**
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax: (413) 2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

*The Mother's Service Society*

**22-7-2011**

# Infinity - யினுடைய ஆற்றல்

## பாகம் – 2

| | Finite | | Infinite |
|---|---|---|---|
| 1. | இதனுடைய வளர்ச்சி பெற்றுக் கொள்வதால்தான் சாத்தியமாகிறது. | 1. | பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ளாமல் பிறருக்கு கொடுத்து இது வளர்கிறது. |
| 2. | சிந்தனை செய்வதால் தான் இதனுடைய அறிவு வளரும். | 2. | சிந்தனை செய்யாமல் மௌனத்தின் மூலம் இதனுடைய அறிவு வளர்கிறது. |
| 3. | Finite Initiative மூலம் சாதிக்கிறது. | 3. | ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாக Surrender மற்றும் சமர்ப்பணத்தின் மூலம் இது சாதிக்கிறது. |
| 4. | Finite பகுத்தறிவை வைத்துச் செயல்படக்கூடியது. | 4. | Infinite நம்பிக்கையை ஆதாரமாக வைத்துச் செயல்படுகிறது. |
| 5. | Finite- னுடைய கண்ணோட்டம் பகுதியானதாகும். | 5. | Infinite- னுடைய கண்ணோட்டம் முழுமையானது. |
| 6. | Finite-க்கு கிடைக்கும் பலன்கள் காலத்திற்கு உட்பட்டவை. | 6. | Infinite-செயல்படும்போது பலன் உடனடியாக கிடைக்கும். |
| 7. | Finite-க்கு சிறியது, பெரியது, Quantity, quality என்ற வித்தியாசங்கள் எல்லாம் உண்டு. | 7. | இதற்கு இந்த வித்தியாசங்கள் எல்லாம் கிடையாது. |
| 8. | இருப்பதை சேகரம் செய்து finite வளரும். | 8. | இருப்பதை செலவு செய்து Infinite வளரும். |
| 9. | Finite என்பது தனக்கு தெரிந்த மற்றும் வழக்கமான விதிமுறைகளின்படி தான் செயல்படும். | 9. | Infinite இயற்கையாக புதுமையாக செயல்படும். |
| 10. | Finite பிரிவினையை வலியுறுத்தி செயல்படுகிறது. | 10. | Infinite முழுமை மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தி செயல்படுவது. |

**1)** நாம் Finite ஆக இருக்கும்பொழுது வெளியிலிருந்து அதிகம் பெற்றுக் கொண்டால் தான் இருப்பதை வளர்க்க முடியும் என்று நமக்குத் தோன்றுகிறது. சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள் ஸ்தாபனம் தனக்கு increment போட்டுக் கொடுத்தால் தான் தன்னுடைய வருமானம் வளரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் தனது சிறிய வருமானத்தைப் பெரிதாக்கிக் கொள்ள இப்படி எண்ணுகிறார்கள் என்றால் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் பொதுவாக நெடுநாளாக வியாபார நிறுவனங்கள் எல்லாமே வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றால், விற்கின்ற பொருட்களின் விலையை ஏற்றி அதன் பலனாக வருகின்ற customer-களிடம் அதிக விலையை பெற்று அதன் மூலம் தான் தன்னுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று நம்பிக் கொண்டு இருந்தன. வருடம் 2000 வரை உலகம் எங்கிலும் எல்லா நிலைகளிலும் உள்ள வியாப நிறுவனங்களிடமும் விலையை ஏற்றித் தான் அதிகம் சம்பாதிக்க முடியும் என்ற கருத்து இருந்தது. பணத்தை ஒரு

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

**finite entity** ஆக நாம் நினைப்பதால் தான் வியாபாரம் செய்யும்போது நாம் இப்படி நடந்து கொள்கிறோம். அதாவது, அடுத்தவரிடமிருந்து அதிகமாக பணத்தை வாங்கித் தான் நம்முடைய வருமானத்தை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்று நம்பி நாம் இதுவரை செயல்பட்டு வந்துள்ளோம்.

ஆனால் நாம் பணத்தை வேறுவிதமாக அணுகினால் அதனுடைய **infinite** அம்சங்கள் நமக்குத் தெரிய வரும். அதாவது, விலையை ஏற்றி அதன் வழியாக அதிகம் சம்பாதிக்கலாம் என்று முயற்சி செய்யாமல் விலையை குறைத்து **customer-**ஐ மகிழ்வித்தால் விலையை ஏற்றும்போது கிடைக்கின்ற வருமானத்தை விட விலையை குறைக்கும்போது வழக்கத்திற்கு மாறாக வியாபார நிறுவனங்கள் வருமானங்கள் பெருகுவதை பார்க்கலாம். விலையை ஏற்றும்பொழுது **customer-**இடமிருந்து வியாபார நிறுவனங்கள் பெற்றுக் கொள்ள முயற்சி செய்கின்றன. இது **finite** அணுகுமுறையாகும். ஆனால் விலையை குறைக்கும்பொழுது **customer-**களுக்கு வியாபார நிறுவனங்கள் **Self giving** செய்கின்றன. **Self-giving** பணத்தினுடைய **infinite** அம்சத்தை வெளிக் கொண்டு வந்து அதை அளவு கடந்து வளர செய்கிறது. இந்த உண்மையை தற்போது உணர்ந்து கொண்டு அதற்கேற்றபடி தன்னுடைய வியாபார அணுகுமுறைகளை பல நிறுவனங்கள் மாற்றிக் கொண்டு வருகின்றன. **Mobile** கம்பெனிகள் வருடம் 2000–த்துக்கு முன்னால் **per minute charges-**ஐ அதிகமாக வசூலித்து கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது **local, STD, ISD** என்று எல்லா கட்டணங்களையும் எல்லா **mobile company**களும் பெருமளவில் குறைத்து விட்டன என்று தெரிய வருகிறது. கட்டணங்களை குறைக்க குறைக்க **customer base** பலமடங்கு அதிகரிப்பதையும் வருமானம் பெருகுவதையும் **mobile company**கள் உணருகின்றன. அம்மாதிரியே **deposit** சேகரிப்பதிலேயே குறியாக இருந்த வங்கிகள் இப்பொழுது அணுகுமுறையை மாற்றிக் கொண்டு எல்லாவிதமான கடன்களையும் இப்பொழுது கஸ்டமர்களுக்கு தேடி வந்து கொடுக்க முன்வருகிறார்கள். டெபாஸிட் சேகரம் செய்யும் வளர்ச்சியில் கிடைப்பதை விட வாடிக்கையாளர்களுக்கு கடன் கொடுப்பதன் மூலம் அதிக வருமானம் வங்கிகளுக்கு கிடைப்பதை வங்கிகள் இப்பொழுது உணர்கின்றன. ஆக மேற்சொன்னவற்றை வைத்துப் பார்க்கும்பொழுது பணத்தை **finite** ஆக நினைத்து நாம் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருந்தால் நம்முடைய வருமான வளர்ச்சியும் **finite** ஆகத்தான் இருக்கும்.ஆனால் இப்படி அதை **finite** ஆக நினைக்காமல் **infinite-** ஆக பாவித்து வருமானத்தை வளர்க்க முயன்றால் **infinite** வருமான வளர்ச்சியை நம் வாழ்க்கையிலும் பார்க்கலாம் என்று தெரிகிறது.

2. **Finite** ஆக இருக்கும்பொழுது சிந்தனை செய்வதால் அறிவு வளர்கிறது. மாறாக **infinite** ஆக இருக்கும்பொழுது மௌனத்தால் அறிவு வளர்கிறது.

உதாரணமாக சாதாரண எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் படைப்பாளிகள் இவர்கள் எல்லோருமே தீவிரமாக சிந்தனை செய்து தான் புதிய புதிய விஷயங்களை கற்பனையில் உருவாக்கி தம்முடைய படைப்புகளை உலகிற்கு அளிப்பார்கள். ஆனால் இப்படி சிந்தனையையும், கற்பனையையும் வலியுறுத்தி உருவாக்கும் படைப்புகளை விட மௌனத்திலிருந்து எழும் படைப்புகள் பல மடங்கு சிறப்பானவைகளாக இருக்கும். பகவான் எழுதியுள்ள *ஃலைப் டிவைன், சின்தஸிஸ் ஃஆப் யோகா மற்றும் சாவித்திரி* ஆகிய உன்னத படைப்புகளெல்லாம் மற்ற எழுத்தாளர் போல அவர் சிந்தனை செய்து எழுதியவைகளே கிடையாது. மாறாக அவருக்குள் குடி கொண்டிருந்த நிரந்தர மௌனத்தில் பிறந்தவை தான் இந்த படைப்புகளெல்லாம். பேனாவையும், பேப்பரையும் எடுத்துக் கொண்டு எழுத அமர்ந்தார் என்றால் எண்ணங்களும், வாக்கியங்களும் தானாக ஒன்றன் பின் ஒன்று உதயமாகி வெளிப்பட்டு எழுத்து வடிவம் பெறுமாம். இப்படித்தான் அவர் எழுதினார் என்று அன்றே தன்னுடைய அஜெண்டாவில் அவருடைய எழுத்தாற்றலைப் பற்றி அன்னை குறிப்பிட்டு இருக்கிறார்.

3. **Finite initiative** மூலம் சாதிக்கிறது. ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாக **surrender** மற்றும் சமர்ப்பணத்தின் மூலம் **Infinite** சாதிக்கிறது.

அகந்தையை மையமாக வைத்து செயல்படுகின்ற சாதாரண மனிதன் தனக்கு பிடித்த காரியங்களையும் தனக்கு எது நல்லது என்று தெரிகிறதோ அது சம்பந்தப்பட்ட காரியங்களையும் தானே முனைந்து **initiative** எடுத்து செய்கிறான். இப்படி தனக்கு வேண்டியதை தானே செய்து கொள்ள நினைப்பது **finite** மனப்பான்மையாகும். இப்படி செயல்படும்போது அவரவருடைய சொந்த அறிவாற்றல், மனோபலம் மற்றும் உடலுழைப்பு, பணபலம் இவற்றுக்குண்டான பலன் தான் கிடைக்கிறது. அந்த பலன் **limited** ஆகத்தான் இருக்கும். ஏனென்றால் அகந்தை என்பது ஒரு **finite entity** தான். ஆனால் அன்னை பக்தர்கள் தங்களுடைய **choice**, தங்களுடைய இஷ்டம் என்று எல்லாவற்றையும் அன்னையிடம் சமர்ப்பணம் செய்து விட்டு அன்னையின் திருவுள்ளம் தங்கள் வாழ்க்கையில் செயல்படட்டும் என்று அன்னைக்கு சுதந்திரத்தை வழங்கும் பொழுது அன்னையினுடைய

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

அருளாற்றல் அன்பர்கள் வாழ்க்கையில் செயல்படத் தொடங்குகிறது. அகந்தையின் பலம் **finite** என்றால் அன்னையின் அருளின் பலம் **infinite** ஆகும் அருளினுடைய வரம்பற்ற பலம் அன்பரின் வாழ்க்கையில் வெளிப்படும்பொழுது அவருடைய வருமானம் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம், மற்றும் கேரியர் **accomplishment** அவரை பொறுத்தவரை ஒரு வரம்பற்ற வளர்ச்சியை காண்கின்றன. அதாவது மாதம் 10,000 ரூபாய் வருமானம் கிடைத்தாலே பெரிது என்று நினைப்பவருக்கு மாத வருமானம் இலட்ச ரூபாயாக உயர்கிறது. **Clerical cadre-**இல் பணியில் சேர்பவர் அதிவேகத்தில் **officer cadre -** க்கு உயர்கிறார். **Working class**-ல் பிறந்து வளர்ந்தவர் அதிவேகமாக **upper class level**-க்கு உயர்கிறார். இவையெல்லாம் சாதாரண மனிதனாக இருந்து அன்னை பக்தனாக மாறுபவருக்கு அவரை பொறுத்தவரை வரம்பற்ற வளர்ச்சிதான்.

4) **Finite** பகுத்தறிவை வைத்துச் செயல்படக்கூடியது. **Infinite** நம்பிக்கையை ஆதாரமாக வைத்துச் செயல்படுகிறது.

மனிதன் தன்னை **finite** ஆக பாவித்து செயல்படும்பொழுது அவனுடைய அறிவு தன்னுடைய **power of reason-**ஐ மட்டுமே நம்பிச் செயல்படுகிறது. அப்பட்சத்தில் ஒருவருடைய அறிவுக்கு என்ன புரிகிறதோ, எது சாத்தியம் என்று படுகிறதோ, அது தான் அவருடைய வாழ்க்கையில் கூடி வரும் என்று அவருடைய அறிவு அவரை நம்ப வைக்கிறது. ஒருவருக்கு இருக்கின்ற வாழ்க்கை சூழ்நிலையில் பெரிய மாற்றத்திற்கோ, உயர்விற்கோ வழியில்லை என்று அவருடைய அறிவு சொல்வதை அவர் நம்பினால், அவருடைய வளர்ச்சி அத்துடன் நின்று விடுகிறது. ஆனால் அறிவு சொல்வதை மதிக்காமல் ஆன்மாவினுடைய நம்பிக்கையை வைத்துச் செயல்படும்பொழுது **finite**ஆக இருக்கின்ற மனிதன் **infinite**ஆக மாறுகிறான். எந்த வருமானம் எந்த பதவி உயர்வு, எந்த சமூக உயர்வு ஒருவருக்கு இல்லை என்று அவருடைய அறிவு சொல்கிறதோ அவற்றை எல்லாம் அவருடைய இறை நம்பிக்கை சாத்தியமாக்கும் பொழுதுதான் **finite-** ஆக செயல்பட்ட தன்னுடைய அறிவை இதுவரையிலும் நம்பியது எவ்வளவு பெரிய தவறு என்பதை மனிதன் உணர்கிறான்.

5) **Finite** பகுதியை மட்டும் தான் பார்க்கும். **Infinite** மனப்பான்மை எப்பொழுதும் முழுமையை மட்டுமே பார்க்கும்.

தன்னுடைய கண்ணோட்டத்தில் இருந்து மட்டும் பார்த்து தனக்கு எது நல்லது தனக்கு எது பிடிக்கிறது, தனக்கு எது சௌகர்யம் என்று அதை மட்டுமே செய்து கொள்கின்ற மனிதன் **finite** மனப்பான்மையில் இருக்கிறான். இப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கின்ற வளர்ச்சி அளவோடுதான் இருக்கும். ஆனால் எந்த ஒரு விஷயத்தையும் முழுமையின் கண்ணோட்டத்தில் இருந்து பார்த்து சம்மந்தப்பட்ட எல்லோருக்கும் எது நல்லது என்பதை கண்டறிந்து அதற்கேற்ற மாதிரி முடிவு செய்து செயல்படுபவர்களுக்கு வளர்ச்சி வரம்பற்றதாகவும் அதிவேகமானதாகவும் இருக்கும். உதாரணமாக சில வியாபார நிறுவனங்கள் ஊழியர்களுக்கு எது நல்லது, கஸ்டமர்களுக்கு எது நல்லது, சமூகத்திற்கு என்ன நல்லது என்று இதையெல்லாம் நினைத்துப் பார்ப்பதில்லை. நிறுவனத்திற்கு இலாபம் மட்டுமே முக்கியம், அது கிடைத்தால் போதும் மற்ற எதுவும் பொருட்டில்லை என்று செயல்படுவார்கள். இப்படி செயல்படுகின்ற நிறுவனங்களுக்கு தற்காலிகமாக இலாபம் அதிகரித்தாலும் நெடுங்கால கண்ணோட்டத்தில் பார்த்தால் அவர்கள் எதிர்பார்த்த வருமானமோ மற்றும் வளர்ச்சியோ அவர்களுக்கு கிடைத்திருக்காது. ஆனால் அளவு கடந்த வளர்ச்சியை பெற்ற வியாபார நிறுவனங்களை ஆராய்ந்து பார்த்தோம் என்றால் கம்பெனி நலன், ஊழியர்களுடைய நலன், விநியோகஸ்தரின் நலன் மற்றும் கஸ்டமர்களாகிய பொது மக்களின் நலன் என்று எல்லோர் நலனையும் மனதில் கொண்டு தான் முடிவு செய்து செயல்படுவார்கள். கோகோகோலா கம்பெனி விநியோகஸ்தர்களின் வளர்ச்சி மற்றும் வருமானம் கஸ்டமர்களுடைய மகிழ்ச்சி என்று இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு செயல்படுவதால் அது இன்று பில்லியன் டாலர் கம்பெனியாக மாறி இருக்கிறது என்றால் அதில் எந்த ஆச்சர்யமும் இல்லை. பில்லியன் டாலர் வருட வருமானம் என்பது ஒரு வியாபார நிறுவனத்திற்கு (4500 கோடி ரூபாய்) ஒரு வரம்பற்ற வளர்ச்சிதான்.

6. **Finite** செயல்பாடுகள் காலத்திற்குட்பட்டு பலனை மெதுவாகத்தான் வழங்கும். **Infinite-**னினுடைய செயல்பாடுகள் காலத்தை முறியடித்து பலனை உடனே வழங்கும்.

மனிதனுடைய அகந்தை என்பது **finite** ஆன ஒரு விஷயமாகும். தன்னுடைய அகந்தையை நம்பி செயல்படுபவன் தன்னுடைய சொந்த அறிவு பலம், பணபலம், பதவி பலம், ஆள் பலம் என்று இவற்றை நம்பித்தான் செயல்படுகிறான். இதற்குண்டான பலன் என்பது மெதுவாகத்தான் வரும். இப்படிப்பட்டவர்கள் ஒரு கம்பெனி என்று ஆரம்பித்தால் சிறிய அளவில் ஆரம்பித்து அதை பெரிதாக்குவதற்கு பத்து அல்லது பதினைந்து வருடங்கள் எடுத்துக் கொள்வார்கள். அரசாங்க அலுவலகத்தில் கிளார்க் வேலையில் சேர்ந்தால் சொந்த திறமையை நம்பி பணியாற்றுவதால் இவர்கள் ஆபீசராக ஆவதற்குள் சர்வீஸே முடிந்து விடும். அகந்தையின் **finite** பலத்திற்கு இப்படித்தான் பலன் மெதுவாகத்தான் கிடைக்கும்.

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

அகந்தையினுடைய **finite** பலத்திற்கு நேர் எதிரானது ஆன்மாவினுடைய **Infinite** பலம் தன்னுடைய **Higher Self**-ஐ வெளிக்கொண்டு வந்து தன் வாழ்க்கைக்கான பொறுப்பை அதன் கைகளில் ஒப்படைத்து அதன் சொல்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றவர் தன் வாழ்க்கையில் முன்னேற்றம் அதிவேகத்தில் வருவதைக் காண்பார். அன்னையிடம் வரும்பொழுது வெறும் ரூ 10,000/- மாத வருமானத்துடன் ஒருவர் வந்துள்ளார் என்றாலும் அவடைய ஆன்மா அன்னையின் ஸ்பர்சத்தால் விழித்துக் கொண்டது என்றால் அந்த ரூ 10,000/- மாத வருமானம் ஓராண்டு முடிவதற்குள்ளேயே இலட்ச ரூபாயாக உயர்வதை அவர் பார்க்கலாம். அகந்தையால் செயல்படுபவன் அதே 10,000 ரூபாய் வருமானத்தை இலட்ச ரூபாயாக உயர்த்துவதற்கு 20, 30 வருடங்கள் எடுத்துக் கொள்வான். 20 வருட முயற்சியை ஆன்ம பலத்தை வைத்துக் கொண்டு செயல்படுகின்றவர் ஒரு வருடமாக சுருக்கும் பொழுது அவரை பொறுத்தவரை பலன் கைமேல் உடனடியாக வந்து விட்டதை போலத்தான் தெரியும். நம் வாழ்கையிலும் அகந்தையை ஒதுக்கி வைத்து விட்டு ஆன்மாவை முன் வைத்து எந்த ஒரு பெரிய வேலையை செய்தாலும் நாம் எதிர்பார்ப்பதை விட வேகமாக அந்த வேலை நிறைவு பெறுவதைப் பார்க்கலாம்.

7. **Finite** செயல்படும்பொழுது சிறியது, பெரியது, எண்ணிக்கை, தரம், உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசங்களுடன் தான் செயல்படுகிறது. ஆனால் **Infinity**-க்கு சிறியது, பெரியது, உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசங்களில்லை.

நம்முடைய செயல்பாடுகள் **finite**-ஆக இருக்கும்பொழுது சிறிய பலனுக்கு சிறிய முயற்சியும், பெரிய பலனுக்கு பெரிய முயற்சியும் எடுக்க வேண்டும் என்று நினைக்கிறோம். மாதம் 10,000 ரூபாய் சம்பாதிக்கின்ற ஒருவர் தன்னுடைய வருமானத்தை இலட்ச ரூபாய்க்கு உயர்த்த விரும்பினால் தன்னுடைய உழைப்பையும், திறமையையும் பத்து மடங்கு உயர்த்த வேண்டும் என்று புரிந்து கொள்கிறார். அப்படி உயர்த்தாவிட்டால் தன் வருமானம் அந்த அளவுக்கு உயராது என்று நம்புகிறார். நம் மனநிலை **finite**- ஆக இருக்கும்பொழுது இப்படி நினைக்கத் தோன்றுவது இயல்பு. இம்மாதிரியே மனிதனுக்கு சில வேலைகள் கடினமானதாகவும், சில வேலைகள் சுலபமானதாகவும் தெரிகிறது. ஒரு வங்கியில் ஒரு கிளார்க்கை பார்த்து ஒரு விவரம் கேட்க வேண்டுமானால், சுலபமாக பார்த்து கேட்டு விடலாம். அதே வங்கியில் **Regional Manager**-ஐ பார்த்து ஒரு கடன் விஷயமாக பேச வேண்டுமென்றால், **appointment** வாங்குவதே கடினம். கிளார்க்கை பார்ப்பது சுலபம். **Officer**-ஐ பார்ப்பது கடினம் என்று நம் அனுபவம் சொல்கிறது. நம்முடைய **finite** மனநிலைக்கு இப்படிப்பட்ட வித்தியாசங்கள் உண்மையாக தெரியலாம். ஆனால் அன்னையின் அருளை எடுத்துக் கொள்ளுங்கள். அது **infinite** ஆனது. அதற்கு சிறியது, பெரியது, உயர்ந்தது, தாழ்ந்தது, மற்றும் **quality, quantity** என்ற வித்தியாசங்கள் கிடையாது. சிறிய விஷயங்களை எவ்வளவு சுலபமாக முடித்துத் தருகின்றதோ, அதே அளவுக்கு சுலபமாகத்தான் பெரிய விஷயங்களை முடித்துத் தருகின்றது. ஒரு சிறுவனோ, சிறுமியோ தன்னுடைய பேனாவையோ, பென்சிலையோ தொலைத்து விட்டதாக வைத்துக் கொள்வோம். தொலைந்த பேனாவையோ பென்சிலையோ அவர்கள் கண்டு பிடித்து தர வேண்டும் என்று அன்னையிடம் வேண்டினால் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் அவர்களுக்கு பேனா மற்றும் பென்சில் இருக்கும் இடத்தை அருள் காட்டி விடுகிறது. இப்பொழுது ஒரு அன்பர் தன் வேலை பறிபோய் விட்டதாகவும், மீண்டும் தனக்கு ஒரு நல்ல வேலை வேண்டும் என்று அவர் அன்னையிடம் வேண்டுவதாக வைத்துக் கொள்வோம். நம்முடைய சிற்றறிவிற்கு என்ன தோன்றுகிறது? தொலைந்த பென்சிலை கண்டு பிடித்து தருவது சுலபம். ஆனால் இழந்த நல்ல வேலைக்கு பதிலாக மீண்டும் ஒரு புதிய நல்ல வேலையை பெற்றுக் கொள்வது சிரமம் என்று தோன்றுகிறது. ஆனால் அருளுக்கு இந்த வித்தியாசங்களெல்லாம் இல்லை. எவ்வளவு சுலபமாக தொலைந்த பென்சிலை கண்டு பிடித்து தருகிறதோ, அவ்வளவு சுலபமாக இழந்த ஒரு நல்ல வேலைக்கு பதிலாக இன்னொரு நல்ல வேலையையும் அருளால் அன்பருக்கு வாங்கித் தர முடியும். நமக்குத் தான் பென்சில் சிறிய விஷயம் வேலை பெரிய விஷயம். ஆனால் அருளுக்கு இவை இரண்டுமே ஒன்று தான். நமக்குத் தலைவலி என்றால் சிறிய விஷயம். ஆனால் கேன்ஸர் என்றால் பெரிய விஷயம். இரண்டு ஆஸ்பிரின் சாப்பிட்டால் தலைவலி விட்டுவிடும். ஆனால் கேன்ஸர் வந்து விட்டால் ஆறு மாதத்திற்கு **treatment** எடுக்க வேண்டும். பெரிய ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் எனது தகப்பனார் ஸ்ரீ கர்மயோகி அவர்களைக் கேட்டால் தலைவலியை எப்படி அருள் விரைவாக குணப்படுத்துகிறதோ, அவ்வளவு விரைவாகவே கேன்ஸர், அல்சர் மற்றும் டி.பி., சக்கரை வியாதி போன்ற பெரிய வியாதிகளையும் அருளால் குணப்படுத்த முடியும் என்று அவர் சொல்கிறார். நமக்கு நம்பிக்கை இவ்வளவு திடமாக இருப்பதில்லை என்பதால் இதற்கான நிருபணங்களை நம் வாழ்க்கையில் நம்மால் பார்க்க முடியாமல் போகின்றது. நமக்கு பார்க்க தெரியவில்லை என்பதால் அருளுக்கு இந்த ஆற்றல் இல்லை என்று அர்த்தமாகாது. எனது தகப்பனார் எதிர்பார்க்கும் அளவுக்கு ஒருவருக்கு திடமான நம்பிக்கை இருந்தால் காலையில் ஒரு டாக்டர் அவருக்கு கேன்ஸர் வந்து விட்டது என்று சொன்னால் இவர் அன்னையிடம் சமர்ப்பணம் செய்து விட்டு மாலையில் வேறு ஒரு டாக்டரிடம் **second opinion** வாங்கச் சென்றால் இரண்டாவது டாக்டர் இவருக்கு கேன்சர் இருப்பதற்கான அறிகுறியே இல்லை என்று சொல்வார். காலை பத்து மணிக்கு ஆரம்பித்த தலைவலி அன்னைக்கு பிரார்த்தனை செய்த பிறகு பத்தரை மணிக்கு விட்டு

விட்டால் அதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் காலையில் இருப்பதாக சொன்ன கேன்சர் மாலையில் மறைந்து விட்டது என்று சொன்னால் அதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இது நம்முடைய **finite** மனப்பான்மையின் நம்பிக்கைக் குறைவைத் தான் காட்டுகிறதேயொழிய அருளின் ஆற்றல் குறைவு என்று காட்டாது. இம்மாதிரியே எவ்வளவு பெரிய ஆபீஸரை நாம் பார்க்க வேண்டி இருந்தாலும் அன்னையிடம் பிரார்த்தனை செய்து விட்டு நாம் **appointment** கேட்டால் அதையும் அருளால் சுலபமாக நமக்கு வாங்கித் தர முடியும். நம்முடைய **finite** மனப்பான்மை தான் நாள்கணக்காக நாம் காத்திருக்க வேண்டும் என்று சொல்கிறது. ஆனால் **appointment** முதல் தடவை கேட்கும்போதே அது கிடைக்கும் என்ற பதிலை வாங்கித் தரக்கூடிய ஆற்றல் **infinite level-** லில் செயல்படக்கூடிய அருளுக்கு உண்டு.

8) **Finite** செலவு பண்ண விரும்புவதில்லை, சேமிக்கத்தான் விரும்புகிறது. ஆனால் **Infinite** செலவு செய்யும்பொழுது வளருகிறது.

நம் கையில் பணம் குறைவாக இருக்கும்பொழுது நமக்கு ஏதாவது ஒரு முக்கிய செலவு வந்தாலும் அந்த செலவை நாம் செய்யத் தயங்கக்கூடாது. தைரியமாக நாம் அந்த செலவைச் செய்தால் நம் கையில் உள்ள பணம் தீரும்பொழுது கூடுதலாக நமக்குத் தேவைப்படுகின்ற பணம் புதிய வருமானமாக எந்த ரூபத்திலாவது வரும் என்று என் தகப்பனார் கர்மயோகி அவர்கள் பணத்தைப் பற்றி கருத்து வெளியிட்டு இருப்பது அன்னை அன்பர்களிடையே நன்றாகத் தெரிந்த விஷயமாக இப்போது இருக்கிறது. நம்முடைய குடும்பம் என்ற சிறிய அளவில் நாம் அதைப் பார்க்கிறோம். பெரிய அளவிலும் இதுவே உண்மை என்பதை தேசிய அளவிலும் நம் நாட்டு அரசாங்கமே பார்க்கலாம். நம் நாட்டில் ஏராளமான முன்னேற்றப்பணிகள் முதலீட்டிற்கு பணம் போதவில்லை என்பதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கங்கையையும், காவிரியையும் இணைக்கின்ற நதி இணைப்புத் திட்டம் இப்படித்தான் பல வருடங்களாக வெறும் பேச்சளவில் இருந்துகொண்டு செயல் வடிவம் பெறாமல் இருக்கின்றது. இதற்கு இலட்சம் கோடி ரூபாய் செலவாகும். அந்த அளவிற்கு பணமில்லை என்பதால் திட்டத்தை கிடப்பில் போட்டுள்ளோம் என்று அரசாங்கம் கூறினால் இந்திய அரசாங்கத்திற்கு அப்பா கர்மயோகி அவர்கள் பின்வருமாறு சொல்வார்கள். “இத்திட்டத்திற்கு 30,000 கோடி தான் இருக்கிறதென்றால் அந்த பணத்தை போட்டு வேலையை ஆரம்பியுங்கள். அரசாங்கப் பணம் தீருகின்ற கட்டத்தில் உலக வங்கியிலிருந்து கடனாகவோ, சர்வதேச **AID Agencies -** களிடமிருந்து நன்கொடையாகவோ அல்லது உள்நாட்டிலிருந்தே இத்தகைய தேசிய முன்னேற்றப் பணிகளுக்கு உதவ விருப்பம் உள்ள பெரிய கார்ப்பரேஷன்கள் மற்றும் **public sector** நிறுவனங்களிலிருந்தும் நிதி உதவியும் பொருளுதவியும் கிடைக்க வாய்ப்ப இருக்கிறது. ஆகவே வேலையை ஆரம்பியுங்கள். பின்னர் என்ன நடக்கிறது என்று பாருங்கள்” என்று சொல்வார். அரசாங்கமும் இதை நம்பி வேலையை ஆரம்பித்தால் கையிலுள்ள பணம் தீரும் கட்டத்தில் கர்மயோகி அவர்கள் சொல்வது போலவே உலக வங்கியும் **AID Agency**–களும் அவர்களே இந்திய அரசாங்கத்தை அணுகி “இது அருமையான திட்டம். செலவுக்கு பணமில்லை என்று நிறுத்தாதீர்கள். மேற்கொண்டு ஆகும் செலவை நாங்களே கொடுக்கிறோம். அவசியம் வேலையை தொடருங்கள்” என்று சொல்வதை நாம் பார்க்கலாம். ஆக தேசத்தின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் உழைக்க முன் வருகிறது என்னும்போது அங்கே **Self-giving** வருகிறது. அந்த **Self-giving finite** ஆன நிதித் தொகையை **Infinite** ஆக மாற்றுகிறது. கடைசி கோடி வரை செலவாகும் போது அதில் ஒரு **perfection** வருகிறது. அந்த **perfection-**ம் **finite-**ஐ **Infinite-**ஆக மாற்றுகிறது.

9) **Finite** தனக்கு தெரிந்ததும் மற்றும் வழக்கமானதும் மற்றும் சமூகத்தில் நடைமுறையில் இருக்கின்ற வழிகளிலும் தான் செயல்பட விரும்பும். ஆனால் **infinite** இப்படி செயல்படுவதில்லை. நமக்கு தெரியாததும், இதுவரை நாம் பார்த்திராத புதிய வழிகளிலும் அதனால் செயல்பட முடியும்.

நமக்கு புரிந்த வழிகளில் தான் செயல்பட வேண்டும் என்று **Infinite** க்கு அவசியமில்லை. நம்முடைய **finite** மனப்பான்மைக்கு இதுவரை யாரும் செய்யாத வேலையை நம்மாலும் செய்ய முடியாது என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் **Infinite** அம்சம் கொண்டவர்கள் இப்படி நினைப்பதில்லை. மற்றவர்களால் செய்ய முடியாவிட்டால் என்ன நம்மால் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். அப்படியே செய்தும் காட்டுகிறார்கள். மனிதனால் பறவையை போல் பறக்க முடியாது என்று மானிட சமூகம் பரவலாக நினைத்தபொழுது பறக்கும் மெஷினை உருவாக்க முடியும் என்று அமெரிக்க கண்டுபிடிப்பாளர்களான ரைட் சகோதரர்கள் நம்பினார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார்கள். காந்திஜீ அரசியலுக்கு வரும்வரையிலும் உலக சரித்திரத்தில் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு அடிமை ஆகியிருந்தது என்றால் வன்முறையிலும், போரிலும் இறங்கித்தான் தன்னுடைய சுதந்திரத்தை மீண்டும் பெற்றுள்ளது. ஆனால் ஆயுதம் எடுக்காமல், வன்முறையில் இறங்காமல் வெறும் அஹிம்சை மற்றும் சத்தியாகிரகத்தை பயன்படுத்தியே சுதந்திரத்தை பெறலாம் என்று காந்தீஜீ அவர்களுக்குத்தான் தோன்றியது. இதுவரை

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

உலகம் கண்டிராத ஒரு புதிய அணுகுமுறையாகும் இது. இது பலிக்காது, கூடி வராது என்று எல்லோரும் சொன்னார்கள். அவர் நம்மைப்போல finite மனப்பான்மை கொண்டவராக இருந்திருந்தால், அவரும் பின்வாங்கியிருப்பார். ஆனால் அவர் Infinite மனப்பான்மை கொண்டவர். அதனால் பின்வாங்கவில்லை. Non-violence பலிக்கும் என்று நம்பினார். ஆகவே முயற்சியை தொடர்ந்தார். வெற்றியும் கண்டார். புதுமையான செயல்பாட்டுக்கு பகவான் மற்றும் அன்னையிடமே நமக்கு சிறந்த உதாரணங்கள் இருக்கின்றன. 2000 வருடங்களாக இந்திய ஆன்மீக வரலாற்றில் பிறப்பு எடுப்பதிலிருந்து விடுபட்டு அதன் பலனாக உலகத்தில் உள்ள துன்பம், அறியாமை, பொய்மை என்று எல்லாவற்றிலும் இருந்து நிரந்தர விடுதலை பெற்று மோட்சத்தை நாடிப் போக வேண்டும் என்பதுதான் ஒரே ஒரு கண்ணோட்டமாக இருந்து வந்துள்ளது. இது finite மனப்பான்மைக்கு உண்டான மனோபாவம். அன்னையும் பகவானும் மட்டும் தான் வேறு புதிய கண்ணோட்டத்திலிருந்து படைப்பை பார்த்தார்கள். ஏன் படைப்பிலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும்? மாறாக அதை ஏன் திருவுருமாற்றம் செய்ய முயற்சி செய்யக்கூடாது என்று அவர்கள் இருவருக்கும் மட்டும்தான் தோன்றியது. இறைவனின் முழுமையையும், படைப்பின் முழுமையையும் உணர்ந்ததால் தான் பகவானும் அன்னையும் இப்படி நினைத்தார்கள். இந்த முழுப்பார்வை மற்றும் இந்த புதிய முயற்சி அவர்களுடைய Infinite தன்மையை காட்டுகிறது. முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை என்று பழைய ஆன்மீகத்தை ஆதரிப்பவர்கள் பேசலாம். ஆனால் பகவானுக்கும் அன்னைக்கும் அது ஒரு பொருட்டில்லை. திருவுருமாற்றம் பெற்ற சத்தியஜீவிய உடம்போடு மீண்டும் வருவோம் என்று அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள். நமக்கு வேண்டியது அவர்களுடைய புதுமையான கண்ணோட்டமும், புதுமையான முயற்சியும் தானே தவிர திருவுருமாறிய உடம்போடு நம்முன் காட்சி அளித்தார்களா இல்லையா என்பதில்லை. நாம் செய்கின்ற வேலைக்குண்டான பலனை அடுத்த நிமிடமே வரவழைக்க வேண்டும் என்ற அளவிற்கு நமக்கு சிறப்பாக வேலை செய்ய தெரிய வேண்டும். இருந்தாலும் அதே சமயத்தில் செய்கின்ற வேலைக்குண்டான பலனை பார்ப்பதற்கு காலம் பூராவும் காத்திருக்க வேண்டுமென்றாலும், காத்திருக்கக் கூடிய Infinite பொறுமையும் வேண்டும் என்று பகவான் சொல்லியிருக்கிறார். அந்த பொறுமை அவரிடமே இருந்தது. நாமும் நம்முடைய செயல்பாடுகளில் இத்தகைய மனோபாவத்தை வெளிப்படுத்தினால் Infinite-னுடைய ஒரு அம்சமாவது நம்மை தொட்டதாக அமையும்.

10) Finite பிரிவினையின் மூலம் செயல்படுகிறது. மாறாக Infinite முழுமையின் மூலம் செயல்படுகிறது.

தனிமனிதனும் சரி, தனி குடும்பமும் சரி, தனி ஸ்தாபனமும் சரி, தங்களுடைய தேவைகள் தங்களுடைய சௌகர்யங்கள் என்று இவற்றை மட்டுமே கருதி மற்றவர்களுடைய தேவைகள் என்ன? அவை நம்முடைய தேவைகளோடு ஒத்துப் போகிறதா என்பதையே கருதாமல் முழுமை எங்கிருக்கிறது என்பதையே உணரமால் செயல்பட்டு வருகிறார்கள். தனி மனிதர்கள், குடும்பங்கள், ஸ்தாபனங்கள் என்று மட்டும் இல்லை. மாநிலங்கள், தேசங்கள், கூட இப்படித்தான் இருக்கிறார்கள். இது finite மனப்பான்மையினுடைய வெளிப்பாடு ஆகும். இதை நாம் வலியுறுத்திக் கொண்டேயிருந்தால் பிரச்சினைகள் வளரத்தான் செய்யுமே ஒழிய தீர்வோ, முன்னேற்றமோ கிடைக்காது. மாமியார் தன் சௌகரியத்தையும், மருமகள் தன் சௌகர்யத்தை மட்டும் வலியுறுத்தி வரும்பொழுது குடும்பத்தில் சுமுகம் போய் விடுகிறது. அம்மா மகனை “என் கூட இரு” என்கிறார். மனைவியோ கணவனை “பிரிந்து வாருங்கள்” என்கிறார். தாயாரை மகிழ்வித்தால் மனைவிக்கு அதிருப்தி, மனைவியை மகிழ்வித்தால் தாயாருக்கு அதிருப்தி இப்படிப்பட்ட சிக்கலில் மாட்டிக்கொண்ட ஓர் ஆண் மகன் தாயார் என்றோ, மனைவி என்றோ பார்க்காமல் ஒட்டுமொத்த குடும்பத்திற்கு எது நல்லதோ அந்தகோணத்திலிருந்து பார்த்து தாயாருக்கு சில வரையறைகளையும், மனைவிக்கு சில வரையறைகளையும் விதித்து அவற்றை அவர்கள் தாண்டி வராமல் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்து பொறுப்பாக நடந்து கொண்டார் என்றால் குடும்பம் என்ற முழுமை உயிர்பெற்று வரம்பில்லாத வளர்ச்சியை காணும். தனி மனிதனும் குடும்பங்களும் தான் இப்படி finite மனப்பான்மையோடு இருக்கின்றன என்று இல்லை. இந்தியா என்ற முழுமைக்கு உட்பட்டிருக்கின்ற மாநிலங்கள் கூட அந்த முழுமையையே உணராமல் நதி நீர் பங்கீட்டு விஷயத்தில் தகராறு செய்து கொள்வதைப் பார்க்கிறோம். காவிரி கர்நாடகத்திற்கும், மற்றும் தமிழகத்திற்கும் என்று இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான ஒரு நதியாகும். ஆனால், இந்த நதி நீரை சுமுகமாக பிரித்து கொள்வதில் எவ்வளவு தகராறு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். படிப்பறிவில்லாத இரண்டு கிராமவாசிகள் கூட ரூபாய் 100 பெறுமானமுள்ள ஒரு பொருளை ஒருவர் விற்கவும் அடுத்தவர் வாங்கவும் முயன்றால் முதல் 10 நிமிடம் பேரம் பேசுவார்கள். அரை டஜன் மாம்பழத்தை விற்கின்ற விவசாயி ரூபாய் 150-ல் ஆரம்பிப்பான். வாங்குகின்ற எதிர் பார்ட்டி ரூ. 75/-ல் ஆரம்பிப்பான். பத்து நிமிடம் பேசி பேரம் படியாமல் இருக்கின்றதை கவனிக்கின்ற மூன்றாம் நபர் “பத்து நிமிடம் பேசியும் எந்த முடிவுக்கும் வரவில்லை. நீயும் பிழைக்க வேண்டும், அவனும் பிழைக்க வேண்டும், ஆகவே 150/-லும் இருக்க வேண்டாம், ரூ. 75/-லும் இருக்க வேண்டாம், ரூ. 100/-க்கு செட்டில் ஆகி விடுங்கள்” என்பார். அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு ரூ. 100/-க்கு பேரம் படிந்து விற்பனையை முடித்துக் கொள்வார்கள். ஆகவே இந்த ரூ. 100/- விற்பனையில் முழுமை என்ன? விற்பவனும் பிழைக்க வேண்டும்,

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

வாங்குபவனும் பிழைக்க வேண்டும். அந்த முழுமையை 10 நிமிடத்தில் உணர்ந்து படிப்பறிவில்லாத விவசாயிகள் கூட தங்கள் வேலைகளை முடித்துக் கொள்கிறார்கள். ஆனால் காவிரி நீர் விஷயமாக தமிழகமும் கர்நாடகமும் ஒரு முடிவுக்கும் வராமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். கர்நாடகமும் பிழைக்க வேண்டும், தமிழகமும் பிழைக்க வேண்டும் என்றால் அந்தந்த வருடமும் காவிரி நீர் தேக்கத்திலுள்ள கொள்ளளவை பொறுத்து அந்தந்த வருடம் எப்படி இருக்கின்ற தண்ணீரை பிரித்துக் கொண்டால் எல்லோரும் பயனடைவார்கள் என்று இரு மாநிலங்களும் செயல்பட்டால் இருவர் கண்ணோட்டத்திலும் ஒரு முழுமை வெளிப்படும். அந்த முழுமையில் தான் **Infinite** இருக்கிறதே ஒழிய "உங்கள் தேவை எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை முக்கால்வாசி தண்ணீர் எங்களுக்கு வேண்டும், மீதி கால்வாசி தான் உங்களுக்கு, பேசாமல் கொடுத்து விடுங்கள்" என்று கர்நாடகமும் பேசினாலும் சரி, தமிழகம் பேசினாலும் சரி, அதில் **finite** மனப்பான்மை தான் வெளிப்படுகிறதே ஒழிய அதில் முழுமையோ **Infinity**-யோ இல்லவே இல்லை.

இப்படி நீயா நானா என்று போட்டியிடாமல் நாம் எல்லோரும் இந்தியர்கள் ஆகவே விட்டுக்கொடுத்து அட்ஜஸ்ட் பண்ணிப் பழக வேண்டும் என்பதால் யாருக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படுகிறதோ அவர்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளட்டும் என்று பரந்த மனப்பான்மையுடன் செயல்பட்டால் நதி நீர் பங்கீடு பிரச்சினை நிரந்தரமாக மறைந்து விடும். இந்தியாவிற்குள் மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை எவ்வளவு அவசியமோ அதே அளவிற்கு சர்வதேச அளவிலும் தேசங்களுக்கிடையே ஒற்றுமை வர வேண்டும் என்பது மிகவும் அவசியமாகிவிட்டது. தேசங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டும் செயல்பட்ட காலம் என்றோ முடிந்து விட்டது. இப்பொழுதுள்ள தொலை தொடர்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் மற்றும் பொருளாதார தொடர்புகள் என்று இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது 1990க்கு மேல் உலகம் ஒன்றாகி விட்டது. **Physical** ஆகவும் **Economic** ஆகவும் ஒன்றாகி விட்டாலும் மக்களுடைய மனதிலோ அரசாங்கங்களின் இடையிலோ ஒற்றுமை உணர்வு இன்னும் முழுமையாக வரவில்லை. ஒன்றுபட்ட இந்த உலகத்தில் தனி இராணுவம் தேவையில்லை தனித்தனி தேசிய **currency** தேவையில்லை. தனித்தனி **Employment policy**-யோ, **Economic policy**–யோ தேவையில்லை. மாறாக உலகம் முழுவதற்குமே ஒரு இராணுவம், ஒரு கரன்சி, ஒரு **Economic policy** இருந்தாலே போதும் என்று என் தகப்பனார் திரு. கர்மயோகி அவர்கள் உலகப் பொருளாதார மாநாடுகளில் மதர் சர்வீஸ் சொஸைட்டியைச் சேர்ந்த திரு. **Garry Jacobs** போன்ற நிபுணர்களை பேசக் சொல்கிறார். இப்படிப்பட்ட ஒன்றுபட்ட செயல்பாடு உலக அளவில் உண்மை ஆகியது என்றால் பொருளாதார பிரச்சினைகள் அரசியல் பகையால் வெடிக்கின்ற போர் பிரச்சினைகள் சுற்றுச் சூழல் சீர்குலைந்து வருவதால் உண்டாகும் பிரச்சினைகள் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைகள் என்று இவையெல்லாம் முடிவுக்கு வரும் என்று அவர் திடமாக நம்புகிறார். அவர் எதிர்பார்க்கும் இந்த ஒற்றுமை உலகில் நிலைபெற்றது என்றால் **Power of Infinity** பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சுற்றுச் சூழலிலும் மக்களுடைய மனநிலையிலும் என்று எல்லா இடங்களிலும் வெளிப்படும். உலகத்தின் பொருட்செல்வம் அபாரமாக பெருகி எந்த நாட்டிலும் வறுமையின் சுவடே தெரியவில்லை என்று வரும். இராணுவத்திற்கே வேலையில்லை என்ற அளவிற்கு உலகத்தில் அமைதி நிலவும். வருமானத்தை தேடிக் கொள்வதற்காக முழுநேரத்தையும் செலவழிக்கும் அவசியம் இல்லாமல் வேலை செய்யும் நேரம் குறையும். ஆனால் வருமானம் அதிகரிக்கும். மீதி இருக்கின்ற **leisure hours**-ஐ மக்கள் உயர்ந்த நோக்கங்களுக்காக செலவு செய்யக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். ஒன்றுபட்டால் **Infinite**-யே நம் வாழ்க்கையில் உதயமாகும்பொழுது மனித சமுதாயம் ஏன் அந்த முயற்சியை எடுக்கக் கூடாது என்பது தான் பகவானும், அன்னையும், என் தகப்பனார் திரு.கர்மயோகி அவர்களும் எழுப்புகின்ற கேள்வியாகும்.

இதுவரையிலும் **Finite** மனப்பான்மையாக பத்து கருத்துகளையும் அதற்கு நேர் எதிராக **Infinite** மனப்பான்மையாக பத்து கருத்துக்களையும் எடுத்து விளக்கினேன். **Finite** மனப்பான்மையின் அடிப்படை அம்சம் என்னவென்றால் எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் இதில் தனக்கு என்ன ஆதாயம் தனக்கு என்ன அசௌகர்யம் என்று பார்ப்பதுதான். எதையும் தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பது என்பது மனிதனுடைய உடம்போடு ஒட்டிப் பிறந்த ஒரு சுபாவம் போலிருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்றால் அது நாய் வாலை நிமிர்த்தும் கதையாக கூட இருக்கலாம். இருந்தாலும் நம் வாழ்க்கையில் **Infinity** மலர வேண்டும் என்றால் எதையும் நம் கண்ணோட்டத்திலிருந்து பார்த்து அதோடு நிறுத்திக் கொள்வது என்ற இடத்திலிருந்து நாம் மாறித்தான் ஆக வேண்டும். அடுத்தவரோடு நமக்கு ஒரு வேலை வந்தால் இவரிடமிருந்து நாம் என்ன பெற்றுக் கொள்ளலாம் என்று தான் யோசிப்போம். நம்முடைய கவனம் எல்லாம் அடுத்தவரோடு உள்ள **Interaction**-ஐ நமக்கு சாதகமாக எப்படி வைத்துக் கொள்வது என்பதில் தான் உள்ளது. அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் ஆதாயத்தை பெற்றுக் கொள்வதில் தான் நாம் குறியாக இருக்கிறோம் என்பதை இதைக் காட்டுகிறது. இது **Finite** மனப்பான்மைக்கே உரிய மனநிலை. இப்படிப்பட்ட மனநிலையை வைத்துக் கொண்டு நாம் எந்த ஒரு பெரிய வளர்ச்சியையும் பார்க்க முடியாது. மாறாக யாரோடு எத்தகைய **Interaction** நமக்கு வந்தாலும், அவர்களுக்கு நாம் என்ன கொடுக்க முடியும், நாம் என்ன செய்ய முடியும்

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

என்று நினைத்துப் பார்த்தோம் என்றால் அது **Infinity** -க்கு உகந்த மனநிலையாகும். வியாபார நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் தம்முடைய சம்பளத்தை அதிகரித்து கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள். இப்படி இருக்காமல் கம்பெனியின் நலனுக்காக தங்களால் மேலும் என்ன செய்ய முடியும் என்று கம்பெனியின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்துச் செயல்பட்டார்கள் என்றால் கம்பெனியும் வளரும் கூடவே இவர்களும் வளர்வார்கள்.

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும் பகுத்தறிவை நம்பிச் செயல்படுவதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை நேர் எதிர்மாறாக உள்ளது. தங்களுடைய பகுத்தறிவை விட தங்களுக்கு கிடைக்கின்ற உள் எழுச்சியைத்தான் **(inspiration)** விஞ்ஞானிகள் அதிகம் மதிக்கிறார்கள். தங்களுடைய பகுத்தறிவு சொல்வதை காட்டிலும் தங்களுக்கு வரும் **inspiration** எதை உணர்த்துகிறதோ அது தான் சரியாக இருக்கும் என்று பல விஞ்ஞானிகளும் கண்டுப்பிடிப்பாளர்களும் நம்புவதாக தெரிகிறது. **Albert Einstein** அவர்கள் ரிலேட்டிவிட்டி தியரிக்காக நோபல் பரிசு வாங்கிய தலை சிறந்த விஞ்ஞானி ஆவார். அவரே எந்த ஒரு சிறந்த விஞ்ஞானியும் **Inspiration** இல்லாமல் எந்த ஒரு பெரிய உண்மையையும் கண்டு பிடிக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார். டார்வின் மற்றும் கலிலியோ போன்ற பெரிய விஞ்ஞானிகளும் சமூகம் அவர்களுடைய கண்டுபிடிப்புகளை ஏற்க மறுத்தபொழுது விடாப்பிடியாக அவர்கள் கண்டறிந்த உண்மைகளை கைவிடாமல் வலியுறுத்திக் கொண்டு தான் இருந்தார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய கண்டுபிடிப்புகளை திடமாக நம்பியதற்கு காரணமே இந்த உண்மைகள் எல்லாம் அவர்களுக்கு கிடைத்த **inspiration** மூலம் உணர்த்தப்பட்ட உண்மைகள் தான். இப்படிப்பட்ட **inspiration** எல்லாம் பகுத்தறிவை நம்பி இருப்பவர்களுக்கு வராது. முழுமையை பார்ப்பவர்களுக்குத்தான் **inspiration**-னே வரும். முழுமை **infinity**-ஐ சார்ந்தது. டார்வின் மனிதனை தனித்து பார்க்கவில்லை. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் மனிதனை ஒரு அங்கமாகத்தான் பார்த்தார். இப்படி பரிணாம வளர்ச்சி என்ற முழுமையை பார்த்தபொழுது மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்ற உண்மை அவருக்கு விளங்கியது. அம்மாதிரியே கலிலியோ அவர்களும், பூமியை தனியாக பிரித்து பார்த்ததில்லை. சூரிய மண்டத்தின் ஒரு அங்கமாகத்தான் பூமியை பார்த்தார். அந்த முழுமையான பார்வைக்கு பூமி தான் சூரியனை சுற்றுகிறது. சூரியனை பூமியை சுற்றவில்லை என்ற உண்மை அவருக்கு விளங்கியது. ஆனால் மனிதனையும் பூமியையும் பிரித்து பார்த்த கத்தோலிக்க மதத்திற்கும் அறிவில்லாத பொது மக்களுக்கும் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பதோ மற்றும் பூமி தான் சூரியனை சுற்றுகிறது என்பதோ ஏற்புடையதாக இல்லை. பிரித்து பார்க்கின்ற அவர்களுடைய சிறிய பகுத்தறிவுக்கு இந்த பெரிய உண்மை விளங்கவில்லை. இந்த பெரிய உண்மையை ஏற்றுக் கொள்ள சமூகத்திற்கு மேலும் பல வருடங்கள் தேவைப்பட்டது.

**Finite** மனநிலை எல்லா முழுமைகளையும் எதிர் எதிராக செயல்படும். இரு துருவங்களாக பிரித்து பார்க்கிறது. மேனேஜ்மெண்ட் மற்றும் ஊழியர்கள் அரசாங்கம் மற்றும் வரிகட்டும் பொது மக்கள் விற்பவர்கள் மற்றும் வாங்குபவர்கள் இவர்களை எல்லாம் நிறைய சந்தர்ப்பங்களில் எதிரிகளை போல நடந்து கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் எல்லோரும் எதிரிகளே இல்லை. இவர்கள் எல்லாரும் ஒற்றுமையாக செயல்பட்டால் இவர்களுடைய உறவு வளரும் மேலும் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ள குடும்பங்கள் ஸ்தாபனங்கள் வியாபார நிறுவனங்கள் மற்றும் சமூகம் என்று எல்லாமே நல்ல வளர்ச்சியைக் காணும். ஆகவே இவர்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளை இவர்கள் கவனிக்காமல் முரண்பாடுகளாக தெரிபவை எல்லாம் உடன்பாடுகள் என்று புரிந்து கொண்டு செயல்பட்டார்கள் என்றால் அப்பொழுது அவர்கள் முழுமையை உணருகிறார்கள் என்று அர்த்தமாகிறது. அந்த முழுமைக்கு வரம்பில்லாத வளர்ச்சி வரும்.

**Physical level**– லிலும், மற்றும் உணர்வு நிலையிலும், அறிவு நிலையிலும் நாம் முழுமையை உணரும்பொழுதே நமக்கு இப்படிப்பட்ட வளர் ச்சி கிடைக்கிறது என்றால் உலகத்தின் ஆன்மீக முழுமையை நாம் உணர்ந்தோம் என்றால் அதை நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படுத்தினோம் என்றால் எத்தகைய வரம்பில்லாத வளர் ச்சி நமக்கு காத்திருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். அதை உணர்ந்து அதற்கேற்றபடி நம் செயல்பாடுகளை மாற்றினால் **Infinity** நம் வாழ்க்கையில் மலர்வதை நாம் உடனே பார்க்கலாம்.